52

New Method History of India

IN TAMIL FOR STANDARD III

[Prepared according to the Elementary School Syllabus 1939]

By

R. SUBBIAH, M. A.

2780
52
OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
7 JAN 1943



T. G. GOPAUL PILLAI
TEPPAKULAM: TRICHINOPOLY

Price As. 5

52/1943/T

புதுமுறை இந்துதேச சரித்திரம்

மூன்றும் வகுப்பிற்குரியது

[1939-ல் வெளியிடப்பட்ட ஆரம்ப பாடசாலைகளின் பாடதிட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது.]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 JAN 1943
MADRAS

ஆசிரியர் :
R. சுப்பையா, M. A.,
சரித்திர விரிவுரையாளர்,
ஹோலி கிராஸ் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

2780

T. G. கோபால் பிள்ளை
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1942 [விலை அணா 5

First Edition 1939.
Second Edition 1940.
Third Edition May 1942.
Revised Edition October 1942.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 JAN 1943
MADRAS

முகவுரை

ஒரு நாட்டு மக்கள் தம்முடைய தேச சரித்திரத்தைப் படிப்பது அவசியம் என்பது வெளிப்படை. மற்றப் பாடங்களைப் போலவே சரித்திரப் பாடத்தையும், இளமையிலேயே கற்கவேண்டும். ஆகையால் இந்திய சரித்திரத்தைச் சிறு வகுப்புக்களிலேயே ஒரு பாடமாக ஏற்படுத்தி, அதற்கு வேண்டிய பாடதிட்டத்தையும் 1939-ல் சென்னைத் துரைத்தனத்தார் புதிதாக வெளியிட்டிருக்கிறார்கள். அப்பாட திட்டத்தை அனுசரித்து இப் **புதுமுறை இந்து தேச சரித்திரம்** என்னும் புத்தகம் மூன்றும் வகுப்பிற்கு ஏற்றவாறு எழுதப் பெற்றிருக்கின்றது.

இப்புத்தகத்தில் தேச சரித்திர சம்பந்தமாக வட இந்தியாவில் விளங்கிய அரசர், அரசிகளுடைய வரலாறுகள் விளக்கப்பட்டிருக்கின்றன. தென் இந்தியாவின் புராணமும், சரித்திரமும் கலந்தவைகளான மனுநீதிச் சோழன், மங்கையர்க்கரசி, இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன், இராணி மங்கம்மாள் இவர்களின் வரலாறுகளும் உறையூர், பேரூர், தென்கரைக் கோட்டை, மகாபலிபுரம் இவற்றின் வரலாறுகளும் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தைப் படித்து மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று நம்புகின்றேன்.

கல்வித் துறையைப் பேணும் அரசியலாரும், கல்வி அபிமானிகளும், கல்விச்சாலை ஆசிரியர்களும் இப்புத்தகத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகமாக வைத்து ஆதரித்து, என்னை இப்பணியில் ஊக்கமுறச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
R. சுப்பையா, M. A.,

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	இராமாயணம்	1
2.	மஹாபாரதம்	6
3.	அரிச்சந்திரன்	9
4.	சிபிச் சக்கரவர்த்தி	13
5.	புத்தர்	15
6.	அசோகர்	18
7.	இராணி சம்யுக்தை	20
8.	பத்மினி	25
9.	பேபர்	27
10	நூர்ஜஹான்	30
11.	மனுநீதிச் சோழன்	32
12.	மங்கையர்க்கரசி	34
13.	உறையூர்	36
14.	பேரூர்	38
15.	தென்கரைக் கோட்டை	40
16.	மகாபலிபுரம்	42
17.	இராஜராஜ சோழன்	45
18.	இராஜேந்திர சோழன்	47
19.	இராணி மங்கம்மாள்	49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 JAN 1943
MADRAS

புதுமுறை
இந்து தேச சரித்திரம்

(மூன்றும் வகுப்பிற்குரியது)

---

1. இராமாயணம்

முற்காலத்தில் வட இந்தியாவில் கோசலம் என்ற ஒரு நாடு இருந்தது. அதற்குத் தலைநகர் அயோத்தி. அந்நாட்டைத் தசரதச் சக்கரவர்த்தி என்பவர் ஆண்டு வந்தார். அவருக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று மனைவிமார் இருந்தார்கள். அவர்களுள் கோசலை வயிற்றில் இராமர் பிறந்தார். கைகேயி பரதரைப் பெற்றாள். சுமித்திரை இலக்குமணர், சத்துருக்கினர் ஆகிய இருவரையும் பெற்றெடுத்தாள். இந்தப் பிள்ளைகள் நால்வருள் இராமர் மூத்தவர். ஆகையால் தசரதருக்குப் பிறகு அவரே பட்டம் பெறவேண்டியவர். இராமரும் அவரது சகோதரர்களும் நன்றாகக் கல்வி கற்றார்கள். இன்னும் அவர்கள் சிறு வயதிலேயே யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை முதலியவைகளையும் கற்றுத் தேர்ந்தார்கள்.

அக்காலத்தில் ஜனகர் என்ற ஒரு மன்னர் மிதிலை நகரத்தை ஆண்டுவந்தார். அவரிடம் ஒரு பெரிய வில் இருந்தது. அவருக்குச் சீதை என்று ஒரு மகள் இருந்

தாள். அந்த வில்லை வளைப்பவருக்கு அவர் தம் மகளைக் கலியாணம் செய்து கொடுப்பதாகப் பிரசித்தப்படுத்தினர். அநேக அரசர்களும் அரச குமாரர்களும் அந்த வில்லை வளைக்க வந்தார்கள். எவராலும் அதை வளைக்க முடியவில்லை. ஆனல், இராமர் அதை வளைத்துவிட்டார். அதனல் ஜனகர் சீதையை இராமருக்குக் கலியாணம் செய்து கொடுத்தார்.

தசரதருக்கு வயதாகிவிட்டது. அதனல் அவர் இராமருக்குப் பட்டம் கட்டத் தீர்மானித்தார். ஆனல் அவரது இரண்டாம் மனைவி கைகேயிக்கு அது பிடிக்கவில்லை. அவள் தன் மகனான பரதனுக்குப் பட்டம் கிடைக்க வேண்டும் என்று விரும்பினள். அதற்குமுன் ஒரு சமயத்தில் தசரதர் கைகேயிக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார். அந்த இரண்டு வரங்களையும் அவள் அச்சமயம் தசரதரிடம் கேட்டாள். அவ்வரங்களுள் ஒன்று பரதருக்குப் பட்டம் கட்டுவது; மற்றொன்று இராமர் பதினன்கு வருஷம் காட்டில் வசிக்கவேண்டும் என்பது. இவற்றைக் கேட்டவுடனே தசரதர் திகைத்துப்போனர். ஆனலும் அவர் முன்னமேயே வாக்குக் கொடுத்திருந்தபடியால் மறுக்கமுடியவில்லை. கைகேயி கேட்டுக் கொண்டபடியே நடக்கவேண்டியதாயிற்று.

இராமர் தவ வேடத்துடன் காட்டிற்குச் சென்றார். சீதையும் இலக்குமணரும் அவருடன் சென்றார்கள்.

இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதும் தசரதர் துக்கம் தாங்காமல் இறந்துவிட்டார்.

இந்தச் சமயத்தில் பரதர் அவரது மாமன் வீட்டிற்குச் சென்றிருந்தார். அவர் அயோத்திக்குத் திரும்பி வந்ததும், எல்லா விஷயங்களையும் விவரமாக அறிந்தார்; தம் தாயைக் கோபித்துக் கொண்டார்; இராமரைத்தேடிக் கொண்டு காட்டிற்குச் சென்றார்; காட்டில் இராமரைக் கண்டு தந்தை இறந்த செய்தியை அறிவித்தார். இராமர் அதைக் கேட்டு மிக்க விசனம் அடைந்தார். தந்தைக்குச் செய்ய வேண்டிய ஈமக் கிரியைகளை அங்கேயே செய்துமுடித்தார்.

பிறகு பரதர் இராமரை அயோத்திக்குத் திரும்பி வரும்படி வேண்டினார். இராமர் அது சரியல்ல என்பதைப் பரதருக்கு எடுத்துக் காட்டி அவரைத் தேற்றினார். பிறகு பரதர் அவருக்குப் பதிலாக அவரது பாதுகைகளைக் கொடுக்கும்படி கேட்டார். இராமர் அவ்வாறே கொடுத்தார். பரதர் பாதுகையுடன் அயோத்திக்குத் திரும்பினார்.

அப்பால் இராமரும், லக்ஷ்மணரும், சீதையும் காட்டில் நெடுந்தூரம்போய் ஒரு பர்ணசாலை அமைத்து அதில் வசித்து வந்தனர். அப்போது ஒரு நாள் இராம லக்ஷ்மணர் இல்லாத சமயத்தில் இலங்கை வேந்தனான இராவணன் என்னும் இராக்ஷஸன் அங்கே



இராமர் வனவாசம்

வந்தான். அவன் சீதையைத் தூக்கிக் கொண்டு சென்று இலங்கையில் சிறை வைத்தான்.

வெளியே சென்றிருந்த இராம லக்ஷமணர் திரும்பி வந்து பார்க்கும்போது சீதையைக் காணவில்லை. அதனால் இருவரும் மிகவும் வருந்தி அவளைத் தேடிக் கொண்டு சென்றனர். வழியில் ஜடாயு என்னும் கழுகு அவர்களைக் கண்டு, இராவணன் சீதையைத் தூக்கிச் சென்ற விஷயத்தைத் தெரிவித்தது. அது கேட்டு இராமர் மிகவும் கோபங் கொண்டு இலங்கையை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் வானர அரசனான சுக்ரீவனும், அவன் மந்திரியான அநுமானும் இராமருக்கு நண்பர் ஆனார்கள். அவர்கள் உதவியால் இராமர் ஒரு பெரிய வானர சேனையைச் சேர்த்துக்கொண்டு இலங்கைக்குச் சென்றார். அங்கே அவர் இராவணனோடு போர் செய்து, அவனது சேனைகளை அழித்து, அவனையும் கொன்றார். பிறகு சீதையை மீட்டுக் கொண்டு அயோத்திக்குத் திரும்பினார்.

ஒரு நல்ல நாளில் அவருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. அயோத்தி நகரத்து ஜனங்கள் எல்லாரும் அதிக சந்தோஷம் அடைந்தார்கள். இராமர் அரசர்க்கெல்லாம் பெரிய அரசராக விளங்கினார்.

இராமர் தந்தை சொல் தட்டாதவர். தீயோரைத் தண்டித்து நல்லோரைக் காப்பவர். நற்குணம் நிறைந்த

சிறந்த வீரர். அவரை இந்துக்கள் மஹா விஷ்ணுவின் அவதாரமாகக் கொண்டு பூஜித்து வருகிறார்கள்.

கேள்விகள்

1. இராமர் யார்? அவர் ஏன் காட்டிற்குப் போனார்?
2. இராவணன் இராமருக்குச் செய்த தீங்கு என்ன?
3. இராமரிடம் பொருந்தியிருந்த நற்குணங்களைக் கூறு.

---

2. மஹா பாரதம்

முற்காலத்தில் வட இந்தியாவில் அஸ்தினபுரி என்ற ஒரு நகரம் இருந்தது. அதைத் திருதராஷ்டிரர், பாண்டு என்னும் இரு சகோதரர் ஆண்டு வந்தனர். இவர்களுள் திருதராஷ்டிரர் மூத்தவர்; பாண்டு இளையவர்.

திருதராஷ்டிரருக்குத் துரியோதனன் முதலான நூறு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குக் கௌரவர்கள் என்று பெயர். பாண்டுவுக்குத் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் ஐந்து புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குப் பாண்டவர்கள் என்று பெயர்.

பாண்டவர்கள் சிறுவர்களாயிருக்கும்போதே அவர்களுடைய தந்தை இறந்துவிட்டார். அவர்களைத் திருதராஷ்டிரர் காப்பாற்றி வந்தார். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் துரோணர் என்பவர் வில் வித்தை கற்பித்தார். கௌரவர்களைவிடப் பாண்ட

வர்கள் எல்லா வித்தைகளிலும் நன்ருகத் தேர்ச்சி பெற்றனர். வில்வித்தையில் அருச்சுனனுக்குச் சம மானவர்கள் அக்காலத்தில் ஒருவரும் இல்லை.

பாண்டவர்களுடைய தேர்ச்சியைக் கண்டு கௌர வர்கள் அவர்கள்மேல் பொருமை கொண்டனர். அவர் களுக்குப் பலவிதங்களில் தீங்கு செய்யலாயினர். இதை அறிந்த திருதராஷ்டிரர் பாண்டவர்களுக்கு இராஜ் யத்தின் ஒரு பங்கைப் பிரித்துக் கொடுத்து அனுப்பி விட்டார். அவர்கள் இந்திரப் பிரஸ்தம் என்னும் ஒரு நகரத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதிலிருந்து நாட்டை ஆண்டு வந்தனர். இதைக் கண்ட கௌரவர்கள் இன் னும் அதிகப் பொருமை கொண்டு பாண்டவர்களை ஒழித்துவிடச் சூழ்ச்சி செய்தனர்.

ஒரு நாள் துரியோதனுதியர் பாண்டவர்களுக்கு ஒரு பெரிய விருந்து செய்தனர். விருந்து உண்டபின் துரியோதனன் தருமனை விளையாட்டுக்காகச் சூதாட அழைத்தான். விளையாட்டாகச் சூதாடுவதில் குற்ற மில்லை என்று எண்ணித் தருமர் ஒப்புக் கொண்டார். இருவரும் சற்று நேரம் விளையாட்டாகச் சூதாடிய பிறகு, பந்தயம் வைத்து ஆட ஆரம்பித்தார்கள். தருமர் முதலில் இரண்டொரு ஆட்டங்கள் ஜயித்தார். பிறகு எல்லா ஆட்டங்களிலும் தோற்றுத் தமது பொருளையும், நாடு நகரங்களையும் இழந்துவிட்டார். அப்பொழுது துரியோதனன் தருமரைப் பார்த்து,

“நீங்கள் பன்னிரண்டு வருஷம் வனவாசம் செய்ய வேண்டும்; பதின்மூன்ருவது வருஷம் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து வசிக்க வேண்டும். அப்படிச் செய்துவிட்டுத் திரும்பி வந்தால் உங்கள் நாட்டை உங்களுக்குத் திருப்பிக் கொடுப்பேன்” என்ருன். பாண்டவர்களும் அதற்குச் சம்மதித்துக் காட்டிற்குச் சென்றனர்.

பாண்டவர்கள் காட்டில் வசிக்கும்பொழுது துரியோதனன் அவர்களைக் கொல்லுவதற்குப் பல சூழ்ச்சிகள் செய்தான். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியாகப் பாண்டவர்கள் பதின்மூன்று வருஷங்களையும் துரியோதனன் சொன்னபடி கழித்துவிட்டு வந்தார்கள். துரியோதனனிடம் ஸ்ரீ கிருஷ்ண பகவானைத் தூதனுப்பி, முன்பு வாக்களித்தபடி தங்கள் நாட்டைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டார்கள். துரியோதனன் அவர்களுக்கு ஐந்து வீடுகளைக் கூடக் கொடுக்க மறுத்துவிட்டான்.

பிறகு பாண்டவர்கள் துரியோதனுதியர்களுடன் போர் தொடுத்தார்கள். இந்தப் போருக்குப் பாரதப் போர் என்று பெயர். பாரதப்போர் பதினெட்டு நாள் நடந்தது. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய உதவியால் பாண்டவர்கள் துரியோதனுதியர் எல்லாரையும் கொன்ருர்கள்; தங்கள் நாட்டைத் திரும்பப் பெற்று நீதி தவருமல் செங்கோல் செலுத்தி வந்தார்கள்.

கேள்விகள்

1. பாண்டவர்கள் என்பவர் யார்? அவர்கள் பெயர் களை வரிசையாகச் சொல்லு.
2. கௌரவர்கள் பாண்டவர்களுக்கு ஏன் தீங்கு செய்யத் தொடங்கினர்?
3. சூதாட்டத்தால் விளைந்த கேடு என்ன?
4. பாரத யுத்தம் நடக்கக் காரணம் என்ன? அதன் முடிவு என்ன?

---

3. அரிச்சந்திரன்

கோசல நாட்டை ஒரு காலத்தில் அரிச்சந்திரன் என்னும் ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் உண் மையே பேசும் உத்தமன். அவன் ஒரு போதும் சொன்ன சொல் தவறமாட்டான். அதனால் அவன் புகழ் தேவலோகத்திலும் பரவிற்று. அவனுடைய மந்திரி யின் பெயர் சத்திய கீர்த்தி. அவனும் மிகவும் உத்தமன்.

தேவலோகத்தில் அந்த உலகத்து அரசனான இந்திரனது சபையில் ஒருநாள் தேவர்களும் முனிவர் களும் கூடியிருந்தார்கள். அப்போது இந்திரன் முனி வர்களைப் பார்த்து, “உலகில் சத்தியம் தவறாதவர்கள் எவராவது உண்டா?” என்று கேட்டான். வசிஷ்டர் எழுந்து, “அரிச்சந்திரன் சத்தியம் தவறாதவன்” என்று கூறினார். விசுவாமித்திரர் அதை மறுத்தார்; தான் அவனைப் பொய்யன் ஆக்குவதாகச் சபதமும் கூறினார்.

பிறகு விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம் சென்ருர்; தான் ஒரு யாகம் செய்யப்போவதாகவும், அதற்கு நிறையப் பொருள் வேண்டும் என்றும் கேட்டார். அரிச்சந்திரன் அவ்வாறே நிறையப் பொருள் கொடுத்தான். ஆனுல், விசுவாமித்திரர் அதைத் தமக்கு வேண்டியபோது பெற்றுக் கொள்வதாகக் கூறி, அவனிடமே வைத்துவிட்டுச் சென்ருர்.

சில நாட்கள் சென்றன. விசுவாமித்திரர் இரண்டு நாட்டியப் பெண்களை அரிச்சந்திரனிடம் அனுப்பி நாட்டியமாடச் செய்தார். நாட்டியமாடின பிறகு பரிசாக அவர்கள் விசுவாமித்திரர் தமக்குச் சொல்லிக் கொடுத்தபடி அரிச்சந்திரனிடம் அவனது இராஜ்யத்தைக் கேட்டனர். அரிச்சந்திரன் அவ்விதம் கொடுப்பது சரியல்ல என்று கூறி அனுப்பிவிட்டான். விசுவாமித்திரருக்கு இதனுல் கோபம் உண்டாயிற்று. அவர் அரிச்சந்திரனிடம் சென்று, “நாட்டை அவர்களுக்குக் கொடுப்பது சரியல்ல என்ருல் எனக்குக் கொடு” என்ருர். அரிச்சந்திரன் அவ்வாறே கொடுத்து விட்டான்.

இவ்வாறு நாட்டைப் பெற்றுக்கொண்ட பிறகு விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம் தான் முன் கொடுத்து வைத்த பணத்தைக் கேட்டார். அந்தப் பொருளைப்பற்றி ஞாபகமே இல்லாமல், தான் நாட்டை எல்லாம் முனிவரிடம் கொடுத்து விட்டதை அரிச்சந்திரன் அறிந்தான். வேறு வழியில்லாமல் நாற்பத்

தெட்டு நாளில் தான் எப்படியாவது அவரது பணத்தைக் கொடுத்து விடுவதாகக் கூறினுன். விசுவாமித்திரரும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

பிறகு அரிச்சந்திரன் தனது மனைவி சந்திரமதியோடும், புத்திரன் லோகிதாசனேடும் காசி நகருக்குச் சென்ருன். மந்திரி சத்தியகீர்த்தியும் அவர்களைப் பின் தொடர்ந்தான். காசிநகரில் அரிச்சந்திரர் தமது மனைவியையும் மகனையும் ஒரு பிராமணருக்கு விற்ருன்; தாம் ஒரு புலையனுக்கு அடிமைப் பட்டான்; இவற்ருல் கிடைத்தபணத்தைக் கொண்டு விசுவாமித்திரர் கடனைத் தீர்த்தான். சந்திரமதியையும் லோகிதாசனையும் விலைக்கு வாங்கிய பிராமணர், அவர்களுக்கு மிகவும் கஷ்டமான வேலைகளைக் கொடுத்துத் துன்பப் படுத்தினர். அரிச்சந்திரனை விலைக்கு வாங்கின புலையன் அவனுக்குச் சுடு காட்டில் பிணம் சுடும் வேலையைக் கொடுத்தான்.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் லோகிதாசன் பிராமணரின் கட்டளைப்படி காட்டில் தர்ப்பை அறுத்துக்கொண்டிருக்கையில் நாகம் கடித்து இறந்தான். அதைக் கேட்ட சந்திரமதி மிகவும் துக்கப்பட்டாள்; பிறகு பிராமணரிடம் உத்தரவு பெற்று மகனைத் தேடிக் காட்டிற்குச் சென்ருள்; அங்கே கிடந்த மகனின் பிணத்தைத் தூக்கிக்கொண்டு, சுடுகாட்டிற்குச் சென்று, அங்கே அதை எரிக்கத் தொடங்கினுள். அப்போது சுடுகாடு காத்துக் கொண்டிருந்த அரிச்சந்திரன் அங்கே

வந்தான். தன் மகன் இறந்ததை அறிந்து மிகவும் வருந்தினன்; பிணஞ் சுடுவதற்காகக் கொடுக்கவேண்டிய கூலிப்பணத்தைப் பிராமணரிடம் வாங்கி வரும்படி சந்திரமதியிடம் கூறி, அவளை அனுப்பினன்.

சந்திரமதி அவ்வாறே செல்லுகையில் வழியில் ஒரு குழந்தை இறந்து கிடக்கக் கண்டாள். அது லோகிதாசனைப் போலவே இருந்தது. அவள் அதை எடுத்துப் பார்த்துக்கொண்டு இருக்கையில், அங்கே அந்த நகரத்துக் காவலாளிகள் வந்தார்கள். அவர்கள் அவளே அக்குழந்தையைக் கொன்றவள் என்று எண்ணி, அவளை அரசனிடம் இழுத்துச்சென்றூர்கள். அந்தக் குழந்தை அரசனுடைய குழந்தை. திருடர்கள் அக்குழந்தையைக் கொன்றிருக்க, விசுவாமித்திரர் சூழ்ச்சியால் இவ்வாறு சந்திரமதியின்மேல் பழி சுமத்தப்பட்டது. உண்மையை அறிய முடியாத அரசன் அவளையே குற்றவாளி என்று தீர்மானித்தான்; அவளைச் சுடுகாட்டிற்குக் கொண்டுபோய் வெட்டி விடும்படி உத்தரவிட்டான்.

சேவகர்கள் அவ்வாறே அவளைச் சுடுகாட்டிற்குக் கொண்டு போனூர்கள். அரிச்சந்திரனே அவளை வெட்டும்படி நேர்ந்தது. அரிச்சந்திரன் அப்பொழுதும் தன் கடமையில் தவருமல் அவளை வெட்டினன். கடவுள் அருளால் அந்த வெட்டு அவளுடைய கழுத்தில் ஒரு பூமாலையாக விழுந்தது. பிறகு லோகிதாசனும்

காசிமன்னனது மகனும் உயிர்பெற்று எழுந்தார்கள். தேவர்கள் பூமாரி பெய்து அரிச்சந்திரனைக் கொண்டாடினார்கள். எல்லாரும் அரிச்சந்திரனுடைய சத்தியந் தவறாத குணத்தை மெச்சினார்கள். விசுவாமித்திரர் தாம் தோற்றுப் போனதை ஒப்புக்கொண்டார். அவர் அரிச்சந்திரனுக்கு அவனுடைய நாட்டையும் தம் தவத்தில் பாதியையும் கொடுத்தார். அரிச்சந்திரன் கஷ்டங்களிலின்று நீங்கிப் புகழுடன் சுகமாய் வாழ்ந்து வந்தான். அவன் சத்தியந் தவறாமல் நடந்ததுபோல நாமும் நடக்க முயல வேண்டும்.

கேள்விகள்

1. விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடத்தில் எப்படி இராஜ்யத்தைப் பெற்றார்?
2. அரிச்சந்திரன் பட்ட கஷ்டங்கள் என்ன?
3. அரிச்சந்திரன் எவ்வாறு தன் மனைவியை வெட்ட நேர்ந்தது?

---

4. சிபிச் சக்கரவர்த்தி

முற்காலத்தில் நமது நாட்டில் சிபிச் சக்கரவர்த்தி என்ற ஓர் அரசர் இருந்தார். அவர் நீதி தவறாதவர்; இரக்கம் உள்ள உத்தமர்; தம்மிடம் அடைக்கலம் என்று வந்தவர்களை எப்படியும் காப்பாற்றுபவர்.

ஒரு நாள் அவர் தம் அரண்மனைத் தோட்டத்தில் தங்கி இளைப்பாறிக் கொண்டிருந்தார். அப்பொழுது

திடீரென்று ஒரு புறா வந்து அவருடைய மடியில் விழுந்தது. அது பயத்தினால் நடுங்கிக்கொண்டிருந்தது. அது தனக்கு நேர்ந்திருக்கும் ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றும்படி அவரை வேண்டிக் கொண்டது. இவ்வாறு அடைக்கலம் என்று வந்த புறாவை அவரும் காப்பாற்றுவதாக வாக்களித்தார்.

சிறிது நேரம் சென்றதும் அங்கே ஒரு பருந்து வந்து சேர்ந்தது. அது அரசரைப் பார்த்து, "இந்தப் புறா என்னால் துரத்தப்பட்டது; எனக்கு இரையாகிய இதை என்னிடம் கொடுத்து விட வேண்டும்" என்றது. அரசர், "அது என்னிடம் அடைக்கலம் புகுந்து விட்டபடியால் அதைக் கொடுக்க முடியாது" என்றார். பருந்து, "அப்படியானால் புறாவின் எடைக்குச் சமமான அளவுள்ள சதையை உமது உடலிலிருந்து அறுத்தெடுத்து எனக்குக் கொடும்" என்றது. அரசரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

உடனே தராசு கொண்டு வரப்பட்டது. அதன் ஒரு தட்டில் புறாவை வைத்து, மற்றொரு தட்டில் அரசர் தம் உடலிலிருந்து மாமிசத்தை அறுத்து வைத்தார். எவ்வளவு வைத்தபோதிலும் எடை சமமாக இல்லை. அதைக் கண்ட அரசர் தாமே அந்தத் தட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டார். உடனே எடை சமமாகிவிட்டது.

இவரது தயாள குணத்தைப் பரீக்ஷிப்பதற்காகவே இந்திரனும் அக்கினி தேவனும் இவ்வாறு வந்து

இவ்விதம் செய்தனர். அவர்கள் சிபியினது குணத்தை மெச்சி அவருக்குப் பல வரங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றனர்.

கேள்விகள்

1. சிபிச் சக்கரவர்த்தியின் குண விசேஷம் என்ன?
2. அவர் புறுவை எவ்விதம் காப்பாற்றினர்?
3. அவரது தயாளகுணத்தைப் பரீக்ஷிக்க வந்தவர்கள் யார்? எவ்வாறு பரீக்ஷித்தனர்?

---

5. புத்தர்

இந்தியாவின் வடக்கிலுள்ள இமயமலைச் சாரலில் முற்காலத்தில் சாக்கியநாடு என்று ஒரு நாடு இருந்தது. அதற்குக் கபிலவாஸ்து என்பது தலைநகர். அந்நாட்டைச் சுத்தோதனர் என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவருடைய மனைவிக்கு மாயாதேவி என்று பெயர். அவர்களுக்குச் சித்தார்த்தர் என்ற புதல்வர் ஒருவர் இருந்தார்.

சித்தார்த்தர் இளமையிலேயே கல்வி கற்றுச் சிறந்த கல்விமானுய் விளங்கினர். அவர் யசோதரை என்னும் அழகு வாய்ந்த ஒரு அரச குமாரியைக் கலியாணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ராகுலன் என்னும் ஒரு புத்திரன் பிறந்தான்.

சித்தார்த்தர் எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்பு கொண்டவர். ஒருவருக்கும் தீங்கு செய்யமாட்

டார். மற்ற அரசகுமாரர்களைப் போலவே இவரும் காட்டிற்குவேட்டையாடச் செல்லுவார். ஆனால் பறவைகளையோ, மிருகங்களையோ கொல்லாமல் அரண்மனைக்குத் திரும்பி விடுவார்.

புத்தர்

ஒரு நாள் சித்தார்த்தர் வீதியில் போகும் போது ஒரு குஷ்டரோகி பிச்சை எடுப்பதைக் கண்டார். இன்னொருநாள் ஒரு கிழவன் தள்ளாடித் தள்ளாடி மிகுந்த கஷ்டப்பட்டு நடப்பதைப் பார்த்தார். வேறொரு நாள் சிலர் ஒரு பிணத்தைச் சுடுகாட்டிற்குத் தூக்கிக் கொண்டு போவதைக் கவனித்தார். இவைகளால் உலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்று அறிந்தார்.

அதனல் இன்பம் தரக்கூடிய ஞானத்தை அவர் அடைய விரும்பினர்.

ஒரு நாள் அவர் தம் மனேவியையும் குழந்தையையும் மற்ற உறவினர்களேயும் விட்டுவிட்டுக் காட்டிற்குச் சென்ருர். அங்கு வசித்துச் சிறந்த முனிவர்களிடம் உபதேசம் கேட்டார். அந்த உபதேசத்தால் இவரது மனம் திருப்தி அடையவில்லே. பிறகு அவர் கயா நகரத்திற்குச் சென்று, அங்கே ஒரு அரசமரத்தடியில் அமர்ந்துதவம் செய்தார். இருபத்தெட்டு நாட்கள் தவத்தில் கழிந்தன. இருபத்தொன்பதாம் நாளில் அவருக்கு ஞானம் உண்டாயிற்று. அதற்குப் பிறகு அவருக்குப் புத்தர் என்று பெயர் வழங்கலாயிற்று. புத்தர் என்ருல் ஞானி என்று அர்த்தம்.

புத்தர் ஒரு புதிய மதத்தை ஏற்படுத்தினர். அதற்குப் பௌத்த மதம் என்று பெயர். புத்தர் பௌத்த மதத்தை முதன் முதலாகக் காசியில் பரவச் செய்தார். பிறகு அவர் பல நகரங்களுக்கும் சென்று தமது மதத்தைப் போதிக்கலாஞர். ஆயிரக்கணக்கான ஜனங்களும் சில அரசர்களும் இவரது மதத்தைத் தழுவினர்கள். சில அரசர்கள் இவரது மதத்தை ஆதரித்தார்கள்.

கேள்விகள்

1. சித்தார்த்தர் என்பவர் யார்?
2. அவர் உலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்பதை எப்படி அறிந்தார்?
3. புத்தர் எப்படி ஞானம் பெற்ருர்?

6. அசோகர்

நமது இந்திய நாட்டை அரசாண்ட சிறந்த அரசர்களுள் அசோகர் ஒருவர். அதனால் அவர் மகா அசோகர் எனப்படுவார். அவரது தகப்பனார் பெயர் பிந்துசாரர் என்பது.

அசோகர் ஒரு சிறந்த போர்வீரர். அவர் பட்டம் பெற்றதும் கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச்சென்றார். அப்போரில் அவர் ஜயம் அடைந்தார். ஆனாலும் அந்த யுத்தத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இறந்ததைக் கண்டு மனம் வருந்தினார். அதனால் அவர் 'இனிமேல் ஒருவரோடும் சண்டைசெய்வதில்லை' என்று தீர்மானித்தார். அப்பால் அதன்படியே நடந்து வரலானார்.

கலிங்க யுத்தத்திற்குப் பிறகு அசோகர் பௌத்த மதத்தைத் தழுவினார். அப்பால் அவர் வேட்டையாடுவதை விட்டுவிட்டார் ; மாமிசம் தின்பதில்லை; அரண்மனையில் விருந்துக்காவது, உணவுக்காவது மாமிசம் சமைப்பதில்லை.

அசோகர் பல சாலைகளை ஏற்படுத்தினார். அவற்றின் இருபக்கங்களிலும் நிழல்தரும் மரங்களைவைத்து வளர்க்கச் செய்தார். இன்னும் சாலைகளின் அருகில் ஆங்காங்குப் பல கிணறுகளை வெட்டினார் ; சத்திரங்களையும் கட்டினார். நாட்டில் பல இடங்களில் வைத்திய சாலைகளை ஏற்படுத்தினார். மிருக வைத்திய சாலைகளும் கூட இவரால் ஏற்படுத்தப்பட்டன. தமது இராஜ்யத்

தில் கிடைக்காத மருந்துகளை வேறு இராஜ்யங்களி லிருந்து தருவித்து ஜனங்களுக்கு உதவினர்.



அசோகர் நாட்டிய கல் தூண்

இன்னும் இவர் பௌத்தமதத்தைப் போதிப்பதற் காகப் பல காரியங்களைச் செய்தார். பௌத்த மத சந்நி

யாசிகளைச் சைனு, ஜப்பான், பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு அனுப்பினுர். பௌத்தமதக் கொள்கைகளை இந்தியாவில் பல இடங்களில் கல் தூண்களிலும் கற்பாறைகளிலும் செதுக்கி வைத்தார். அவற்றை நாம் இப்போதும் காணலாம்.

கேள்விகள்

1. அசோகர் என்பவர் யார்? அவருடைய மதம் யாது?
2. கலிங்கப் போருக்குப் பிறகு அவருடைய நடத்தையில் என்ன மாறுதல் ஏற்பட்டது ?
3. அசோகர் ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் எவை ?

---

7. இராணி சம்யுக்தை

சுமார் 750 வருஷங்களுக்குமுன் வட இந்தியாவில் ஆஜ்மீர், கன்னேஜ் என்று இரண்டு இராஜ்யங்கள் இருந்தன. அவைகளில் ஆஜ்மீர் நாட்டுக்கு அரசர் பிருதிவிராஜன் என்பவர். கன்னேஜ் நாட்டுக்கு ஜயசந்திரன் என்பவர் அரசர். இந்த இரண்டு அரசர்களுக்கும் விரோதம் ஏற்பட்டிருந்தது.

ஜயசந்திரனுக்குச் சம்யுக்தை என்று அழகிய ஒரு மகள் இருந்தாள். பிருதிவிராஜன் அவளைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பினுர். சம்யுக்தைக்கும் பிருதிவி ராஜனைக் கலியாணம் செய்துகொள்ள

வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஜயசந்திர னுக்கு இது பிடிக்கவில்லை.

இப்படியிருக்கையில் ஜயசந்திரன் தம் மகள் சம்யுக்தைக்குச் சுயம்வரம் ஏற்படுத்தினர். சுயம்வரம் என்ருல் 'தன் கணவனைத் தானே தேர்ந்தெடுத்தல்' என்று அர்த்தம். சுயம்வர காலத்தில் பல அரசர்கள் ஒரு சபாமண்டபத்தில் கூடி யிருப்பார்கள். அப்போது அரச குமாரி கையில் மணமாலையுடன் அங்கு வரு வாள். அவள் அந்த அரச குமாரர்களைப் பார்த்துக் கொண்டே போய் அவர்களில் தனக்கு இஷ்டமான ஒருவருக்கு அந்த மாலையை இடுவாள். பிறகு மாலே யிட்ட அரசருக்கும், அந்த அரச குமாரிக்கும் விவாகம் நடக்கும்.

சம்யுக்தையின் சுயம்வரத்தில் ஜயசந்திரன் பிரு திவிராஜனை அவமானப்படுத்த எண்ணினர்; அவ ரைப்போல ஒரு பொம்மை செய்து அதற்கு வேலைக் காரனைப்போல உடை உடுத்தினர்; அதைச் சுயம்வர மண்டபத்தின் வாசலில் நிற்க வைத்தார். பிருதிவி ராஜனே எப்படியாவது சம்யுக்தையைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார்; மாறுவேடத்துடன் வந்து, சுயம்வர மண்டப வாச லில் வைக்கப்பட்டிருந்த பொம்மையின் பின்புறம் ஒளிந்து கொண்டார். அவருடைய வீரர்கள் சிலர் பிச்சைக்காரர்களைப்போல வேஷம் போட்டுக்கொண்டு சுயம்வர மண்டபத்தின் வாசலில் இருந்தனர்.



பிருதிவி ராஜர் சம்யுக்தையைத் தூக்கிச் செல்லுதல்

சுயம்வரம் ஆரம்பமாயிற்று. சம்யுக்தை கையில் மணமாலையுடன் சுயம்வர மண்டபத்திற்கு வந்தாள். அவள் அங்கிருந்த அரசர்களைப் பார்த்துக் கொண்டே போனாள். ஆனால் ஒருவருக்கும் மாலை போடவில்லை. கடைசியாகச் சுயம்வர மண்டபத்தின் வாசலை அடைந்தாள். அங்கே பிருதிவி ராஜனைப்போலச் செய்துவைக்கப்பட்டிருந்த பொம்மைக்கு மாலை சூட்டினாள். உடனே அங்கே ஒளிந்துகொண்டிருந்த பிருதிவிராஜன் அவளைத் தூக்கிச்சென்று தம் குதிரையின்மேல் வைத்துக் கொண்டு தம் நாட்டிற்குப் போய்விட்டார். ஜயசந்திரனுடைய வீரர்கள் இதைக்கண்டு பிருதிவிராஜனைப் பின் தொடர்ந்து துரத்திச் சென்றார்கள். ஆனால் பிச்சைக்காரர்கள் வேஷத்தோடு இருந்த பிருதிவிராஜனது வீரர்கள் அவர்களோடு சண்டையிட்டு அவர்களைத் தடுத்துவிட்டனர். கடைசியாகச் சம்யுக்தை பிருதிவிராஜனை மணந்து கொண்டாள். இதனால் ஜயசந்திரனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. அவர் பிருதிவிராஜனை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார்.

இக்காலத்தில் இந்தியாவின் வடமேற்கிலுள்ள ஆப்கானிஸ்தானம் என்னும் நாட்டிற்குக் கோரி முகம்மது என்பவர் அரசராயிருந்தார். அவர் ஒரு முஸ்லிம் மன்னர். ஜயசந்திரன் பிருதிவிராஜனை ஒழிப்பதற்கு கோரி முகம்மதுவின் உதவியை வேண்டினார். கோரி

முகம்மதுவும் உதவிசெய்ய ஒப்புக்கொண்டார். இருவரும் பிருதிவியின்மேல் படையெடுத்தனர்.

யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பு சம்யுக்தை ஆணுடை தரித்துக்கொண்டு தன் தந்தையாகிய ஜயசந்திரனிடம் சென்றாள். பிருதிவிக்கு விரோதமாகக் கோரி முகம்மதுவின் உதவியைத் தேடுவது சரியல்ல என்பதை அவருக்கு எடுத்துச் சொன்னாள். ஜயசந்திரன் அவளை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. அவர் அவளை வெளியே போய்விடும்படிக் கட்டளையிட்டார். சம்யுக்தை துக்கத்துடன் திரும்பிச் சென்றாள்.

இரண்டு கட்சிக்காரருக்கும் தனேசுவரம் என்னும் இடத்தில் யுத்தம் நடந்தது. பிருதிவிராஜன் யுத்தத்தில் கொல்லப்பட்டார். சம்யுக்தை தீயில் மூழ்கி இறந்தாள். பிறகு கொஞ்ச காலத்திற்கெல்லாம் கோரி முகம்மதுவிற்கும் ஜயசந்திரனுக்கும் யுத்தம் உண்டாயிற்று. யுத்தத்தில் ஜயசந்திரர் தோற்றுவிட்டார். கோரி முகம்மது அவருடைய இராஜ்யத்தைத் தமது இராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார்.

கேள்விகள்

1. பிருதிவிராஜன் என்பவர் யார்? ஜயசந்திரன் என்பவர் யார்?
2. சம்யுக்தையின் சுயம்வரத்தில் நடந்த விசேஷம் என்ன?
3. ஜயசந்திரன் கோரி முகம்மதுவின் உதவியை ஏன் வேண்டினார்?
4. முடிவில் ஜயசந்திரன் அடைந்த கதி என்ன?

8. பத்மினி

வட இந்தியாவில் மீவார் என்ற ஒரு இராஜ்யம் உண்டு. அதற்குத் தலைநகரம் சித்தூர். சுமார் 650 வருஷங்களுக்கு முன் மீவாரைப் பீம்சிங் என்பவர் ஆண்டு வந்தார். அவர் ஒரு இராஜபுத்திர அரசர். அவருடைய மனைவி மிகவும் அழகு வாய்ந்தவள். அவள் பெயர் பத்மினி.

அக்காலத்தில் டில்லி நகரத்தில் அலாவுதீன் கில்ஜி என்பவர் அரசராயிருந்தார். அவர் ஒரு முஸ்லிம் மன்னர். அவர் பல இராஜ்யங்களை ஜயிக்க விரும்பினார்; அதோடு பத்மினியின் அழகைக் கேள்விப்பட்டு அவளை மணந்து கொள்ளவும் ஆசைப்பட்டார். அதனால் அவர் சித்தூரின்மீது படையெடுத்துச் சென்று அதை முற்றுகையிட்டார்.

முற்றுகை நீண்ட காலம் நடந்தது. ஒரு நாள் அலாவுதீன், பத்மினியின் உருவத்தை நிலைக்கண்ணாடியில் காட்டினால், தாம் யுத்தத்தை நிறுத்தி விடுவதாகப் பீம்சிங்கிற்குத் தெரிவித்தார். பீம்சிங் அவ்வாறே அலாவுதீனைச் சித்தூருக்கு வரவழைத்து, நிலைக் கண்ணாடியில் பத்மினியின் உருவத்தைக் காணச் செய்தார். அதைப் பார்த்துவிட்டு அலாவுதீன் திரும்புகையில், பீம்சிங் அவரை வழியனுப்ப வந்தார். அப்போது அலாவுதீன் பீம்சிங்கைக் கைது செய்தார். பிறகு அவர், தன்னைக் கலியாணம் செய்து கொள்ளா

விட்டால் பீம்சிங்கைக் கொன்று விடுவதாகப் பத்மினிக்குத் தெரிவித்து அவளைப் பயமுறுத்தினர்.

பத்மினி அழகில் மட்டுமல்ல, யுக்தியிலும் சிறந்தவள். அவள் பீம்சிங்கை மீட்பதற்கு ஓர் உபாயம் செய்தாள். அவள் அலாவுதீனைக் கலியாணம் செய்து கொள்வதற்காகத் தான் 700 தாதிகளுடன் அவருடைய கூடாரத்திற்கு வருவதாகத் தெரிவித்தாள். பிறகு எழுநூறு மூடுபல்லக்குகள் தயாரித்தாள். ஒவ்வொன்றிலும் பெண் வேடம் பூண்ட ஒவ்வொரு வீரனை ஆயுதங்களோடு உட்கார வைத்தாள். தானும் ஒரு பல்லக்கில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். பல்லக்குகளைப் பெண் வேடம் தரித்த வீரர்கள் சுமந்து சென்றனர்.

பல்லக்குகள் அலாவுதீன் தங்கியிருந்த இடத்திற்கு முன் வந்து இறங்கின. பத்மினி அலாவுதீனைக் கண்டு, தான் கடைசியாக ஒரு தடவைப் பீம்சிங்கைப் பார்த்துப் பேசிவிட்டுவர அனுமதிகேட்டாள். அவரும் அனுமதி கொடுத்தார். உடனே பத்மினி பீம்சிங்கிடம் போய்த் தான் செய்திருக்கும் உபாயத்தைக் கூறினாள். பிறகு அவரையும் அழைத்துக் கொண்டு இரகசியமாகச் சித்தூருக்குச் சென்றுவிட்டாள். பெண் வேடம் பூண்டிருந்த வீரர்கள் உடனே அலாவுதீன் சேனையுடன் சண்டையிட்டனர். அவர்கள் அதன் ஒரு பகுதியைத் தோற்கடித்துவிட்டுச் சித்தூருக்குச் சென்றுவிட்டார்கள்.

இதனால் அலாவுதீனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. அவர் சித்தூரை அழித்து விடும்படி தமது போர் வீரர்களுக்குக் கட்டளை யிட்டார். மும்முரமான சண்டை நடந்தது. பீம்சிங்கும் அவரது வீரர்களும் சண்டையில் மடிந்தார்கள். பத்மினியும் மற்றப் பெண்களும் தீயில் விழுந்து இறந்தனர். பிறகு அலாவுதீன் திரும்பிச் சென்றுவிட்டார்.

கேள்விகள்

1. பத்மினி என்பவள் யார்?
2. அலாவுதீன் ஏன் சித்தூரை முற்றுகை யிட்டார்?
3. பீம்சிங் எவ்வாறு கைது செய்யப்பட்டார்?
4. பத்மினி பீம்சிங்கை எவ்வாறு மீட்டாள்?

---

9. பேபர்

சுமார் 500 வருஷங்களுக்கு முன் டில்லியில் பேபர் என்ற ஓர் அரசர் இருந்தார். அவர் ஒரு முஸ்லிம் அரசர். அவர் மிகவும் நல்லவர்; சிறந்த கல்விமான்; குடிகளிடத்தில் அன்பு உடையவர்.

ஒரு நாள் அவர் மாறு வேஷத்துடன் டில்லி நகரின் தெருவொன்றில் போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு யானை மதங்கொண்டு தெருவோடு ஓடி வந்தது. அதைக்கண்டு எல்லாரும் பயந்து கூச்சலிட்டுக்கொண்டு அங்கு மிங்கும் ஓடினார்கள். அவ்வாறு ஓடி வருகையில் ஒரு சிறு குழந்தை கீழே விழுந்து

விட்டது. யானை அக்குழந்தையின் சமீபத்தில் வந்து விட்டது. குழந்தை அதன் காலில் அகப்பட்டு நசுங்கி

பேபர்

விடும்போல் இருந்தது. அச்சமயத்தில் திடீரென்று ஒருவன் பாய்ந்து வந்து அக்குழந்தையைத் தூக்கிக்

கொண்டு அப்பால் சென்முன். ஆ! அவ்விதம் செய்தது யார்! அவர்தான் அரசரான பேபர்.

ஒரு சமயத்தில் பேபருடைய குமாரர் ஹுமாயூன் மிகவும் கொடிய வியாதியால் வருந்தினுர். பல வைத்திய நிபுணர்கள் அவருக்குச் சிகிச்சை செய்தார்கள். ஆனுலும் அவருடைய நோய் குணமாகவில்லே. அதனுல் பேபர் மிகவும் வருந்தினுர். அப்போது சில பெரியோர்கள் பேபரிடம், "உமக்கு மிகவும் பிரியமான ஒரு பொருளேக் கடவுளுக்குக் கொடுத்தால் உமது மகன் பிழைப்பான்" என்றனர். அப்படியே அவர் தமக்கு மிகவும் பிரியமான தமது உயிரைக் கடவுளுக்குக்கொடுக்கத் தீர்மானித்தார். பேபர் ஹுமாயூனுடைய படுக்கையை மூன்று முறை சுற்றி வந்தார். பிறகு கடவுளே நோக்கித் தம்முடைய உயிரை ஏற்றுக்கொண்டு, தமது மகனுடைய உயிரைக் காப்பாற்றுமாறு பிரார்த்தித்தார். அப்பால் நாளுக்கு நாள் ஹுமாயூன் படிப்படியாகக் குணமடைந்தார். பேபருடைய தேக சுகம் குறைந்து கொண்டே வந்தது. முடிவில் ஹுமாயூன் சுகம் பெற்று எழுந்தார். பேபர் இறந்து விட்டார். பேபரின் அன்பு எப்படிப்பட்டது பாருங்கள்!

கேள்விகள்

1. பேபர் என்பவர் யார்?
2. பேபர் தம் குடிகளிடம் அன்புடையவர் என்பது எதனுல் விளங்குகிறது?
3. பேபர் ஹுமாயூனேக் காப்பாற்றியது எப்படி?

10. நூர்ஜஹான்

பேபாது பேரரான அக்பர் இந்தியாவை நன்கு ஆண்ட சிறந்த அரசர்களுள் ஒருவர். அவருக்குக் கீழ் உத்தியோகம் செய்பவராய் வங்காளத்தில் ஷேர் ஆப்கன் என்ற ஒருவர் இருந்தார். அவருக்கு மிகிர்-உன்-னிஸ்ஸா என்னும் பெயருடைய ஒரு மனைவி உண்டு. அவள் மிகவும் அழகு வாய்ந்தவள். அவளே பிற்காலத்தில் பிரசித்தி பெற்ற நூர்ஜஹான் என்ற பெயருடன் அரசி ஆனாள். அந்த வரலாறு பின் வருமாறு :

அக்பர் இறந்த பிறகு அவருடைய குமாரரான ஜஹாங்கீர் சக்கரவர்த்தியானார். ஜஹாங்கீருக்கு விரோதமாக வங்காளத்தில் நடந்த சூழ்ச்சிகளில் ஷேர் ஆப்கன் கலந்து கொண்டார். அதனால் ஜஹாங்கீரின் ஆட்கள் ஷேர் ஆப்கனைக் கொன்று விட்டார்கள்.

ஷேர் ஆப்கன் இறந்த பின் மிகிர்-உன்-னிஸ்ஸா ஆக்ரா நகருக்குச் சென்றாள். அங்கே ஜஹாங்கீர் அவளைச் சந்தித்தார். உடனே அவர் அவளைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பினார். சிலகாலம் கழித்து இருவருக்கும் கலியாணம் நடந்தது. கலியாணம் நடந்த பிறகு ஜஹாங்கீர் அவளுக்கு 'நூர்ஜஹான்' என்று பெயரிட்டார். நூர்ஜஹான் என்பதற்கு 'உலக ஜோதி' என்று அர்த்தம்.

நூர்ஜஹான் நன்றாகக் கல்வி கற்றவள். அவள் கோஷா முறையைப் பின்பற்றவில்லை. வெளியில் புறப்

பட்டு ஜஹாங்கீரோடு வேட்டைக்குச் செல்லுவாள். அரண்மனே ஜன்னலருகில் நின்றுகொண்டு பிரஜை களுக்குப் பேட்டி கொடுப்பாள். இன்னும் அவள்

ஜஹாங்கீர்

நூர்ஜஹான்

இராஜ்ய காரியங்களில் சாமார்த்தியம் வாய்ந்தவ ளாக இருந்தாள். அதைக்கண்ட ஜஹாங்கீர் அவளேயே இராஜ்ய காரியங்களேக் கவனிக்கும்படி விட்டுவிட்டார். இவ்வாறு நூர்ஜஹான் அரசியாக விளங்கினுள்.

நூர்ஜஹான் அரசியார் மிகவும் நன்ருக நாட்டை ஆண்டு வந்தார். அவர் ஜஹாங்கீரின் உருவத்தோடு தம் உருவத்தையும் சேர்த்து நாணயத்தில் அமைத் தார். ஜஹாங்கீர் இறந்தபின் அவருடைய பிள்ளேகளில் ஷாஜஹான் என்பவர் பட்டம் பெற்ருர். அப்பால் நூர்ஜஹான் இராஜ்ய விஷயங்களிலிருந்து விலகிக்

கொண்டார். நூர்ஜஹானைப் போல நுண்ணறிவும், இராஜாங்க காரியங்களில் திறமையும் வாய்ந்தவர்கள் மிகச் சிலரேயாவர்.

கேள்விகள்

1. நூர்ஜஹான் என்பவள் யார் ?
2. நூர்ஜஹான் என்ற பெயருக்கு அர்த்தம் என்ன?
3. நூர்ஜஹானின் குண விசேஷங்களைக் கூறு.

---

11. மநுநீதிச் சோழன்

சோழ வம்சத்தில் மநுநீதிச் சோழன் என்ற ஒரு சோழ அரசர் இருந்தார். அவர் திருவாரூரைத் தலை நகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டு வந்தார். அவர் சிறந்த நீதிமான். அவருடைய அரண்மனை வாயிலில் ஒரு மணி கட்டியிருக்கும். அதற்கு 'ஆராய்ச்சி மணி' என்று பெயர். அரசரிடம் நேரில் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறவர்கள் அந்த மணியை அடிப்பார்கள். உடனே அரசர் வெளியில் வந்து அவர்களுடைய குறையை விசாரித்து வேண்டியவற்றைச் செய்வார்.

மநுநீதிச் சோழனுக்கு வீதிவிடங்கன் என்று ஒரு மகன் உண்டு. ஒரு நாள் அவன் கோவிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனம் செய்யும் பொருட்டு இரதத்தில் ஏறிச் சென்றான். அப்போது ஒரு பசுக் கன்று இரதத்தின்

சக்கரத்தில் அகப்பட்டு இறந்துவிட்டது. அதைக் கண்டு வீதிவிடங்கன் மிகவும் வருத்தம் அடைந்தான். அப்போது தாய்ப்பசு அங்கே வந்து கதறியது. சிறிது நேரங் கழித்து அது அரண்மனைக்கு ஓடி ஆராய்ச்சி மணியைத் தன் கொம்புகளால் ஆட்டி அசைத்து அடித்தது.

மணியோசை கேட்டவுடன் அரசர் வெளியில் வந்து பார்த்தார். பசு கண்களில் நீர் வடியத் துன்புற்று நிற்பதைக் கண்டார்; நடந்தது என்ன என்பதைத் தன் முதல் மந்திரியிடம் கேட்டு அறிந்தார்; பழிக்குப் பழி வாங்கி அப்பசுவிற்கு நீதி வழங்கத் தீர்மானித்தார்.

உடனே அவர் தம் முதல் மந்திரியைப் பார்த்துப் "பசுவின் கன்று இறந்த இடத்தில் வீதிவிடங்கனைக் கிடத்தி, அவன்மீது இரதத்தைச் செலுத்தி அவனைக் கொன்று விடுக" என்றார். அம் மந்திரி அக் கட்டளையை நிறைவேற்றத் துணியவில்லை. அதனால் அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்தார். பிறகு அரசர் பசுவின் கன்று இறந்த இடத்திற்குத் தாமே சென்றார். அங்கே தம் மகன் வீதிவிடங்கனைத் தரையில் படுக்க வைத்தார். அவன் மேல் தம் இரதத்தைத் தாமே செலுத்தி அவனைக் கொன்றார்.

சிவபெருமான் அவருடைய நீதி தவறாத தன்மையைக் கண்டு சந்தோஷப்பட்டார்; அவருக்குக் காட்சி அளித்தார்; இறந்துபோன பசுவின் கன்றையும்,

மந்திரியையும், வீதிவிடங்கனையும் எழுப்பித் தந்தார். அதைக் கண்ட குடிகள் அளவில்லாத சந்தோஷம் அடைந்தார்கள்.

கேள்விகள்

1. மநுநீதிச் சோழன் எந்த ஊரிலிருந்து அரசாண்டார்?
2. அவர் குமாரன் செய்த தவறு என்ன?
3. அவருடைய முதல் மந்திரி ஏன் தற்கொலை செய்து கொண்டார்?
4. மநுநீதிச் சோழன் செய்த நீதி தவறாத செய்கை என்ன?

---

12. மங்கையர்க்கரசி

சுமார் 1300 வருஷங்களுக்குமுன் மதுரையில் கூன் பாண்டியன் என்று ஒரு அரசர் இருந்தார். அவர் காலத்தில் மதுரையில் சமண மதம் அதிகமாகப் பரவி இருந்தது. கூன் பாண்டியன் சமண மதத்தில் சேர்ந்திருந்தார்.

கூன் பாண்டியனுடைய மனைவியின் பெயர் மங்கையர்க்கரசி. அவருடைய முதல் மந்திரியின் பெயர் குலச்சிறையார். அவர்கள் இருவரும் சமண மதத்தில் சேரவில்லை; பழமையான சைவ மதத்தைத் தழுவி யிருந்தார்கள். அரசன் சமண மதத்தில் சேர்ந்ததை இவர்கள் விரும்பவில்லை. மதுரையை விட்டுச் சமண

சமயத்தை ஒழித்துவிட வேண்டும் என்று இருவரும் விரும்பினார்கள். அதற்கேற்ற சமயமும் அவர்களுக்கு வாய்த்தது.

மங்கையர்க்கரசி ஒருநாள் சைவ சமயாசாரியராகிய திருஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டாள். திருஞானசம்பந்தர் சீர்காழி என்னும் ஊரிலே பிறந்தவர்; பிராமண குலத்தைச் சேர்ந்தவர். தேவாரம் பாடிய மூன்று பெரியார்களில் அவர் ஒருவர். அவர் பல சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு யாத்திரை செய்து வந்தார். அவர் சைவ சமயத்தை உலகிலே பரவச் செய்தார்.

மங்கையர்க்கரசி திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரும்படி வேண்டிக் கொண்டாள். அவளுடைய விருப்பத்தின்படி சமணர்களோடு வாது செய்வதற்காக அவர் மதுரைக்குச் சென்றார். அப்போது கூன் பாண்டியனுக்குக் காய்ச்சல் உண்டாயிற்று. சமணர்களால் அதைக் குணப்படுத்த முடியவில்லை. சம்பந்தர் விபூதி பூசி அந்த நோயைப் போக்கினார்.

பிறகு திருஞானசம்பந்தரும் சமணர்களும் தங்கள் மத உண்மைகளை ஓர் ஏட்டில் எழுதித் தனித் தனியே நெருப்பில் போட்டார்கள். சமணர்களுடைய ஏடு வெந்துவிட்டது. திருஞானசம்பந்தருடைய ஏடு வேகவில்லை. அப்பால் அவர்கள் தங்கள் மத உண்மைகளை எழுதிய ஏடுகளை வைகையாற்று வெள்ளத்தில்

போட்டார்கள். திருஞானசம்பந்தரது ஏடு வெள்ளத்தை எதிர்த்துக்கொண்டு சென்றது. சமணர்களுடைய ஏடு ஆற்றேடு சென்றுவிட்டது. இவ்வாறு சமணர்கள் தோற்ருர்கள்; திருஞானசம்பந்தர் ஜயித்துவிட்டார். அதனுல் கூன் பாண்டியன் சமண சமயத்தை விட்டு விட்டுச் சைவ சமயத்தில் சேர்ந்தார். சமண மதம் மதுரையை விட்டு நீங்கியது. இவ்வாறு மங்கையர்க்கரசி நாட்டில் சைவ மதம் தழைத்து ஓங்கும்படிச் செய்தாள்.

கேள்விகள்

1. கூன்பாண்டியன் ஆதியில் எந்த மதத்தைச் சேர்ந்திருந்தார் ?
2. மங்கையர்க்கரசியார் எந்த மதத்தைச் சேர்ந்திருந்தாள் ?
3. திருஞானசம்பந்தர் வரலாறு என்ன ?
4. மங்கையர்க்கரசியார் சமண மதத்தைப் போக்குவதற்கு என்ன காரியம் செய்தாள் ?

---

13. உறையூர்

உறையூர் இப்பொழுது திருச்சிராப்பள்ளி நகரத்தின் ஒருபாகமாயிருக்கிறது. ஆனுல் முற்காலத்தில் அது ஒரு பெரிய பட்டணமாயும், சோழர்களது இராஜதானியாயும் இருந்தது. திருச்சிராப்பள்ளி அப்பொழுது ஒரு சிறிய ஊராக இருந்தது. இந்த உறையூர் ஒரு காலத்தில் மண்மாரியால் அழிந்தது என்று சொல்லுகிருர்கள்; அந்தக் கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:

சுமார் 1800 வருஷங்களுக்குமுன் உறையூரில் பராந்தகன் என்ற ஒரு சோழ அரசன் ஆண்டு வந்தார். அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் சாரமா முனிவர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவர் சிறந்த சிவபக்தர். அவர் தினமும் திருச்சிராப்பள்ளி மலை மேல் இருக்கும் சுவாமியைப் பூஜித்து வருவார்.

சாரமா முனிவர் சுவாமி பூஜைக்காகத் திருச்சிராப் பள்ளி மலையின் அடிவாரத்தில் ஒரு நந்தவனம் வைத்திருந்தார். ஒரு நாள் காலையில் அவர் வழக்கப்படி அங்கே பூப்பறிக்கப் போனார். அங்கே ஒரு புஷ்பம் கூடக் காணப்படவில்லை. எல்லாப் புஷ்பங்களையும் அம்முனிவருக்குத் தெரியாமல் அரசியின் ஆட்கள் பறித்துச் சென்றுவிட்டனர். பிறகு ஒவ்வொரு நாளும் இப்படியே புஷ்பங்கள் பறித்துச் செல்லப்பட்டன.

இதை அறிந்த முனிவர் உடனே அரசனிடம் சென்று முறையிட்டார். அரசன் அலட்சியமாக இருந்துவிட்டார். அதைக்கண்டு முனிவருக்குக் கோபம் உண்டாயிற்று. அவர், "உறையூர் மண் மாரியால் அழியக் கடவது" என்று சபித்தார். அவ்வாறே உறையூர் மண்மழை பெய்து அழிந்தது.

மண்மாரி பெய்யும்பொழுது ஜனங்கள் எல்லாரும் உறையூரைவிட்டு ஓடினார்கள். அரசன் ஒரு குதிரையின்மீது ஏறிக்கொண்டு வேகமாகச் சென்றார். அவர் காவிரியாற்றைக் கடந்து போகும்போது குதிரையிலிருந்து கீழேவிழுந்து இறந்துவிட்டார்.

கேள்விகள்

1. உறையூர் முற்காலத்தில் எப்படி யிருந்தது ?
2. சாரமா முனிவர் என்பவர் யார் ? அவர் என்ன செய்து வந்தார் ?
3. உறையூர் மண்மாரியால் அழியக் காரணம் என்ன ?

---

14. பேரூர்

கோயம்புத்தூர் ஜில்லாவில் பேரூர் என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கே பிரசித்தி பெற்ற சிவன் கோவில் ஒன்று உண்டு. இந்த ஊரை 'மேலைச் சிதம்பரம்' என்று சொல்லுவார்கள். இந்த ஊர்க் கோவிலில் வருஷா வருஷம் ஆனி மாதத்தில் ஒரு திரு விழா நடக்கும். இதை நாற்று நடவுத் திருவிழா என் பார்கள். இத்திருவிழா எப்படி ஏற்பட்டது என்ப தற்கு ஒரு கதை உண்டு. அதாவது :

முற்காலத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் என்று ஒரு பெரியார் இருந்தார். தேவாரம் பாடிய மூன்று பேர் களில் அவர் ஒருவர். அவர் பல சிவ ஸ்தலங்களுக்கு யாத்திரையாகச் சென்றார். இவ்விதம் அவர் பேரூரை அடைந்தார். அப்போது அக்கோவிலிலுள்ள சுவாமி அவருக்குத் தரிசனம் கொடுக்க இஷ்டப்படவில்லை. அவர் அம்பிகையையும் அழைத்துக்கொண்டு வயலுக் குச் சென்றுவிட்டார். அப்போது அவர் நந்திதேவரிடம்

தாம் போகும் இடத்தைச் சுந்தரமூர்த்தி நாயனருக்குத் தெரிவிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டுச் சென்ருர்.

பிறகு சுந்தரமூர்த்தி நாயனர் கோவிலை அடைந்தார். அங்கே சுவாமியையும் அம்மனையும் காணவில்லை. சுந்தரமூர்த்தி நாயனர் அங்கும் இங்கும் சுவாமியைத் தேடினர். எங்கும் சுவாமி காணப்படவில்லை, அங்கிருந்த நந்தி தேவரைப் பார்த்து "சுவாமி எங்கே போனர் ?" என்று கேட்டார். நந்தி தேவர் பதில் பேசவில்லை. "பதில் சொல்லாவிட்டால் சபித்து விடுவேன் !" என்று நாயனர் பயமுறுத்தினர். நந்தி தேவர் வாயைத் திறக்காமல் சுவாமி சென்ற திசையை நோக்கித் தமது தலையைத் திருப்பிக் காண்பித்தார்.

உடனே நாயனர் அந்தப் பக்கமாகச் சென்று வயலில் சுவாமியைக் கண்டார். அங்கே தேவாரப் பாடல் ஒன்று பாடினர். பிறகு சிவபெருமானும் அம்பிகையும் கோவிலுக்குத் திரும்பி வந்தார்கள். நந்தி தேவர் தாம் சென்ற இடத்தைத் தெரிவித்ததற்காகச் சிவபெருமான் அவர்மேல் கோபங்கொண்டு, அவரது கீழ் வாயை வெட்டிவிட்டார். சுவாமி வயலுக்குச் சென்றதைக் குறித்து இப்பொழுது 'நாற்று நடவுத் திருவிழா' அவ்வூரில் கொண்டாடப்படுகிறது.

கேள்விகள்

1. பேரூர் எங்கே இருக்கிறது ? அங்கே என்ன திருவிழா நடைபெறுகிறது ?

2. சுந்தரமூர்த்தி நாயனர் என்பவர் யார் ?

3. நாற்று நடவுத் திருவிழா எதற்காகக் கொண்டாடப்படுகிறது ?

---

15. தென்கரைக் கோட்டை

சேலம் ஜில்லாவில் தென்கரைக்கோட்டை என்று ஓர் ஊர் இருக்கிறது. இந்த ஊர் எப்படி உண்டாயிற்று என்பதைக் குறித்து ஒரு கதை உண்டு. அக் கதை பின் வருமாறு :

சேலத்தில் கொஞ்ச காலத்திற்குமுன் சென்னப்ப நாயக்கர் என்ற பிரபு ஒருவர் வசித்துவந்தார். ஒரு நாள் அவர் வேட்டையாடச் சென்றார். அப்போது அவர் இப்போது தென்கரைக்கோட்டை என்னும் ஊர் இருக்கும் இடத்தில் வந்து தங்கினர். அங்கே அவர் தூங்கும்போது ஒரு கனக் கண்டார். அக்கனவில் ஸ்ரீராமர் அவருக்குத் தரிசனம் தந்தார். அப்போது அவரிடம் இராமர் தமக்கு அவ்விடத்தில் ஒரு கோவில் கட்ட வேண்டும் என்று சொன்னர் ; அதற்கு வேண்டிய பொருள் அங்கே பூமியில் புதைந்து கிடப்பதாகவும் தெரிவித்தார்.

உடனே சென்னப்ப நாயக்கர் தூக்கத்தைவிட்டு எழுந்தார். கனவில் கடவுள் சொல்லிய இடத்தைத் தோண்டிப் பார்த்தார். அங்குப் பெரும் புதையல் கிடைத்தது. அப்பொருளைத் தம் தம்பியிடம் கொடுத்து,

அங்கே ஸ்ரீராமர் கோயிலும் ஒரு கோட்டையும் சில வீடுகளும் கட்டும்படி சொன்னார். அவரும் அவ்வாறே அவைகளைக் கட்டத் தொடங்கினார்.

கொஞ்ச காலம் ஆன பிறகு சென்னப்ப நாயக்க ருக்கு அவருடைய தம்பி வீணில் பொருளைச் செல வழிப்பதாக ஒருவன் கடிதம் எழுதினான். அது உண் மையா என்று அறிவதற்காகச் சென்னப்பநாயக்கர் தென்கரைக் கோட்டைக்குப் புறப்பட்டார். அவர் வரு வதைக் கேள்விப்பட்டு, அவருடைய தம்பி அவரை எதிர்கொண்டு அழைக்க வந்தார். அப்போது முன்பு கோள்சொன்னவன் மறுபடியும் இப்போது ஒரு கோள் சொன்னான். அதாவது அவருடைய தம்பி அவரைக் கொல்ல வருவதாகச் சொன்னான். சென் னப்ப நாயக்கர் அவன் சொன்னதை நம்பித் தம் தம்பி யைக் கொல்ல உத்தரவிட்டார். அவ்வாறே அவரது தம்பி கொல்லப்பட்டார்.

பிறகு சென்னப்ப நாயக்கர் தென்கரைக் கோட் டைக்குச் சென்றார். அங்கே தாம் சொன்னபடி தம் தம்பி எல்லா வேலைகளையும் செய்து முடித்திருப்பதைக் கண்டார். தாம் தம் தம்பிக்குச் செய்த அநியாயத்தை உணர்ந்தார். மிகவும் துக்கப்பட்டுத் தற்கொலை செய்து கொண்டு இறந்தார்.

கேள்விகள்

1. தென்கரைக் கோட்டை எங்கே இருக்கிறது ?
2. சென்னப்ப நாய்க்கர் என்பவர் யார் ?

3. அவர் தம் தம்பியை ஏன் கொலை செய்யும்படி சொன்னார் ?

4. அவர் ஏன் தற்கொலை செய்துகொண்டார் ?

---

16. மஹாபலிபுரம்

சுமார் 1300 வருஷங்களுக்குமுன் ஏறக்குறைய தென் இந்தியா முழுவதையும் பல்லவர்கள் ஆண்டு

மஹாபலிபுரத்திலுள்ள கல் ரதங்கள்

வந்தார்கள். அவர்கள் தென்னிந்தியாவில் அநேக இடங்களில் பாறைகளைக் குடைந்து கோவில்களைக்

கட்டினார்கள். அவைகளுக்குப் பாறைக் கோவில்கள் என்று பெயர்.



மஹாபலிபுரத்திலுள்ள பழைய விளக்குக் கூண்டு

பல்லவ அரசர்களில் நரசிம்ம வர்மப் பல்லவர் என்ற ஓர் அரசர் இருந்தார். அவருக்கு மாமல்லர்

என்ற ஒரு பெயரும் உண்டு. அவர் தம் பெயரால் மாமல்லபுரம் என்று ஓர் ஊரை உண்டாக்கி, அதில் பல குடிகளைக் குடியேறச் செய்தார். அந்த ஊர் காஞ்சிபுரத்திற்கு அருகில் இருக்கிறது. அது இப்பொழுது மஹாபலிபுரம் என்று வழங்குகிறது.

மஹாபலிபுரத்தில் ஏழு பாறைகளைக் குடைந்து ஏழு ரதங்கள் போன்ற உருவங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை நரசிம்ம வர்மரால் செய்விக்கப் பட்டவை. அந்த ரதங்களில் பல உருவச்சிலைகள் செதுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் அருச்சுன ரதம் எல்லாவற்றிலும் அழகானது. தென் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வருபவர்கள் மஹாபலிபுரத்தைப் பார்க்காமல் போவதில்லை. அதைப் பார்த்தவர்கள் எல்லாரும் அங்குள்ள சிற்ப வேலைகளைப் புகழ்கிறார்கள்.

மஹாபலிபுரம் பல்லவர்களுக்குத் துறைமுகப் பட்டினமாக இருந்தது. வெளிநாட்டுக் கப்பல்கள் அங்கே வந்து தங்கின. இரவில் கப்பல்கள் துறைமுகம் வந்து சேருவதற்கு உதவியாக அங்கே தீபஸ்தம்பம் ஒன்றும் இருந்தது.

கேள்விகள்

1. மஹாபலிபுரம் எங்கே இருக்கிறது ?
2. அந்த ஊரை அமைத்தவர் யார் ?
3. மஹாபலிபுரத்தில் உள்ள விசேஷம் என்ன ?

---

17. இராஜராஜ சோழன்

பண்டைக் காலத்தில் தென் இந்தியாவில் மூன்று பெரிய இராஜ்யங்கள் இருந்தன. அவை சேர, சோழ, பாண்டிய இராஜ்யங்களாம். சுமார் 1000 வருஷங்களுக்கு முன் சோழ நாட்டைப் பராந்தகன் என்னும்



பிரகதீசுவரர் கோவில்

ஒரு சோழ அரசன் ஆண்டு வந்தார். அவருடைய சந்ததியில் இராஜராஜ சோழன் என்பவர் தோன்றினார். சோழ அரசர்களுள் இராஜராஜ சோழன் கீர்த்தி பெற்றவர்.

இராஜராஜ சோழன் பல நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று அவற்றைக் கைப்பற்றினர். சேர நாடு, பாண்டிய நாடு ஆகியவை அவருக்குக் கீழ்பட்டன. அவரிடம் ஒரு பெரிய கப்பற்படை இருந்தது. அதைக் கொண்டு அவர் இலங்கை முதலிய தீவுகளை ஜெயித்தார்.

இராஜராஜ சோழன் தஞ்சாவூரில் ஒரு பெரிய கோவில் கட்டினர். அதற்குப் பிரகதீசுவரர் கோவில் அல்லது பெரிய கோவில் என்று பெயர். அது ஒரு சிவன் கோவில். அந்தக் கோவிலைச் சுற்றி மதிலும் அகழியும் இருக்கின்றன. அக்கோவிலில் ஒரு பெரிய நந்தி இருக்கிறது. அது ஒரே கல்லால் செய்யப்பட்டது. இன்னும் அந்தக் கோவிலில் ஓர் உயரமான கோபுரம் உண்டு. அதன் நிழல் எப்போதும் பூமியில் படுவதில்லை. அதனல் அது நிழல் சாயாத கோபுரம் எனப்படுகிறது. இக்கோவிலைச் சுற்றியுள்ள மண்டபங்களின் சுவரில் புராணக் கதைகளை விளக்கும் சித்திரங்கள் எழுதப்பட்டுள்ளன.

இராஜராஜ சோழன் சைவ சமயத்தில் பற்றுள்ளவர். தேவாரமும் திருவாசகமும் இவர் காலத்தில் சேர்த்து வைக்கப்பட்டன. இதைச் செய்து முடிக்க நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் உதவியாயிருந்தார்.

கேள்விகள்

1. தென்னிந்தியாவில் பண்டைக் காலத்தில் இருந்த இராஜ்யங்கள் எவை ?
2. இராஜராஜ சோழன் என்பவர் யார் ?
3. இராஜராஜ சோழன் செய்த காரியங்கள் என்ன ?
4. தஞ்சாவூர்க் கோயிலிலுள்ள விசேஷங்கள் எவை ?

---

18. இராஜேந்திர சோழன்

இராஜேந்திர சோழன் இராஜராஜ சோழனுடைய மகன். இவர் தம் தந்தையைப் போலவே சிறந்த அரசர். இவரும் பல நாடுகளின்மீது படை எடுத்துச் சென்று ஜயம் அடைந்தார். இவர் வடக்கே உள்ள பல நாடுகளையும் ஜயித்துக் கொண்டே கங்கை நதி வரையில் சென்றார். அதனால் இவருக்குக் கங்கை கொண்ட சோழன் என்னும் பட்டம் கிடைத்தது.

இவர் தம் ஜெயத்தைக் குறிப்பதற்காகக் கங்கை கொண்ட சோழபுரம் என்னும் ஒரு நகரை உண்டாக்கினர். அதையே தம் தலைநகராக ஆக்கிக் கொண்டார். அதற்கு ஜயங்கொண்ட சோழபுரம் என்றும் ஒரு பெயர் உண்டு. அது இப்போது ஜயங்கொண்டம் என்று வழங்கப்படுகிறது.

இராஜேந்திர சோழன் இவ்வூரில் ஓர் அழகிய அரண்மனையையும் ஒரு கோவிலையும் கட்டினார். அந்தக் கோயில் தஞ்சாவூரிலுள்ள கோயிலைப் போன்ற ஒரு கோவில் ஆகும். இந்தக் கோவிலில் உள்ள கோபுரமும் நிழல் சாயாத கோபுரமே. இங்கிருந்த அரண்மனை இப்போது அழிந்து விட்டது. கோவில் பழுதுபட்ட நிலைமையில் இருக்கிறது.



கங்கைகொண்ட சோழீசுவரர் கோவில்

இராஜேந்திர சோழன் நாற்பது வருஷம் அரசு செலுத்தினார். அவருடைய ஆட்சியில் நாடு செழித்திருந்தது. ஜனங்கள் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்திருந்தார்கள்.

கேள்விகள்

1. இராஜேந்திர சோழன் என்பவர் யார்?
2. கங்கைகொண்டசோழன் என்ற பெயர் அவருக்கு எப்படி ஏற்பட்டது ?
3. இராஜேந்திரசோழன் செய்த காரியங்கள் என்ன ?

---

19. இராணி மங்கம்மாள்

சுமார் 300 வருஷங்களுக்கு முன் மதுரையில் அரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர் என்ற ஒரு அரசர் அரசாண்டார். அவர் தமது 22-ஆம் வயதில் வைசூரி நோயால் இறந்துவிட்டார். அவருக்கு ஓர் ஆண் குழந்தை இருந்தது. அந்தக் குழந்தைக்கு வயது வருகிற வரையில் முத்து வீரப்ப நாயக்கரின் தாயாராகிய மங்கம்மாள் இராஜ்யத்தை ஆண்டாள். அதனால் அவளுக்கு இராணி மங்கம்மாள் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இராணி மங்கம்மாள் இராஜ்யத்தை நன்றாக ஆண்டார்; குடிகளுக்குப் பல நன்மைகள் செய்தார் ; பல கோயில்களையும் சத்திரங்களையும் கட்டினார்; பல குளங்களை வெட்டி ஜனங்களுக்குத் தண்ணீர் வசதி உண்டாக்கினார்; சாலைகளின் இருபக்கங்களிலும் நிழல் தரும் மரங்களை வைத்தார். திருச்சிராப்பள்ளியில் டவுன் ஹால் என்று வழங்கப்படும் கட்டிடம் மங்கம்

மாள் கட்டிய கொலு மண்டபம் ஆகும். ஸ்ரீரங்கத்தில் காவிரி நதியின் கரையில் இவரால் கட்டப்பட்ட மண்டபம் ஒன்று உண்டு. அதற்கு அம்மா மண்டபம் என்று பெயர். ஜனங்கள் இந்த இராணியைத் தங்கள் தாயைப்போலவே பாவித்தார்கள். அதனால் அந்த மண்டபத்திற்கு 'அம்மா மண்டபம்' என்று பெயர் வந்தது.

இளவரசர் அரசராவதற்குரிய வயதை அடைந்த போது மங்கம்மாள் அவருக்கு இராஜ்யத்தைக் கொடுக்க மறுத்துவிட்டார். இளவரசரை அரசராக்க வேண்டு மென்று நாட்டில் சிலர் விரும்பினர். அவர்கள் மங்கம் மாளைச் சிறையில் வைத்தார்கள். அங்கே மங்கம்மாள் பட்டினி கிடந்து இறந்து போனார்.

கேள்விகள்

1. மங்கம்மாள் என்பவர் யார்?
2. மங்கம்மாள் எப்படி இராஜ்யம் ஆள நேர்ந்தது?
3. மங்கம்மாள் நாட்டிற்குச் செய்த நன்மை என்ன?
4. மங்கம்மாள் கட்டிய கட்டிடங்களுள் இரண்டு கூறு.

THE B. N. PRESS, MADRAS.

2780